Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 11, 2023

வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் 11, 2023 | ஒளி: 09 கதிர்: 060 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

பெருந்தோட்ட மக்களுக்கு அனுதாபத்தை கோரவில்லை

# உரிமையையே கோருகிறோம்

## பாராளுமன்றத்தில் மனோ எம்.பி தெரிவிப்பு

**பொருளாதாரத்துக்கு தங்களின் உழைப்பை இன்றும் அர்ப்பணித்து வருகிறார்கள்**

**“மாநிற” பேரினவாத ஆட்சிக்கு பெருந்தோட்டங்கள் சென்றுள்ளன**



பெருந்தோட்ட எமது உறவுகள் நவீன அடிமைத்துவத்தில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அரசாங்கத்திடமிருந்து தாங்கள் அனுதாபத்தை கோரவில்லை எனவும் எமது உரிமையையே கோருகிறோம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (10) மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “பெருந்தோட்ட மக்கள் ‘நவீன அடிமைத்துவத்தின் அடையாளமாக வாழ்கிறார்கள் என ஐக்கிய நாடுகள் சபையில் அறிக்கையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

“மலையகம் 200”

# “கிழக்கிலிருந்து மலையகம்” செயற்திட்டம் முன்னெடுப்பு

■ *வி.ரி. சகாதேவராஜா*



“மலையகம் 200” என்ற செல்நெறிக்கு இணைவாக கிழக்கு மாகாணத்தில் இருந்து புதிய செயலணி ஒன்று உருவாக்கப்பட்டு அனைவருக்கும் பகிரங்க திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

“கிழக்கில் இருந்து மலையகம்” என்ற மகுடத்தின் கீழ் இந்த

தொடர்ச்சி P2

# தெரிவுக்குழுவில் சு.கவுக்கு பிரதிநிதித்துவம் இல்லை



பாராளுமன்ற தெரிவுக்குழுக்களில் தமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் எம்.பி.யுமான தயாசிறி ஜயசேகர, பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (10) தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “முன்னாள் ஜனாதிபதிக்கு புதன்கிழமை பேசுவதற்கு ஏழு நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டது. இறுதியில் இரண்டு மூன்று நிமிடம் பேசக் கிடைத்தது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாததால் புதன்கிழமை ஐந்து முறை இந்த சபையில் “கோரம்” கேட்க வேண்டியேற்பட்டது.

தொடர்ச்சி P2

18 நாட்களின் பின்னர்

# சத்தியாக்கிரக போராட்டதை கைவிட்டனர் விவசாயிகள்



உடவளவ நீர்த்தேக்கத்தில் இருந்து விவசாயத்துக்காக தண்ணீர் திறந்துவிடுமாறு கோரி விவசாயிகள் குழுவினால் 18 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம், வியாழக்கிழமை (10) கைவிடப்பட்டது.

சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்துக்கு நீரை விடுவித்துள்ளமையினால் குறித்த போராட்டம் கைவிடப்பட்டது.

தொடர்ச்சி P2

# பாராளுமன்றம் கலைப்பு: 90 நாட்களில் தேர்தல்



பாகிஸ்தான் பாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைய மூன்று நாட்கள் இருக்கும் நிலையில் முன்கூட்டியே கலைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் ஆட்சியில் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனால் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவருடைய ஆட்சி கவிழ்ந்தது.

தொடர்ச்சி P2



# காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (10) காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி ஒற்றை திருக்கை மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா ஓகஸ்ட் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

6) நிதர்ஷன் விநோத்

# மிலிந்த மொரகொடவின் பதவிக்காலம் முடிகிறது



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த் மொரகொடவின் பதவிக்காலம் ஒக்டோபர் முதலாம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

புதுடெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தனது பதவிக்

தொடர்ச்சி P2

# டொலர், தங்கத்தின் பெறுமதி சரிந்தது

இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ள அதேவளை, ஒரு பவுண் ஆபரணத் தங்கத்தின் விலையும் வியாழக்கிழமை (10) குறைவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி, வியாழக்கிழமை (10)வெளியிட்ட நாணயமாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 313 ரூபாய் 61 சதமாகவும், விற்பனை விலை 326 ரூபாய் 78 சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

அபிவிருத்தி திட்டத்துக்கு ஆதரவளிக்காத

# அரச அதிகாரிகள் குறித்து கடும் தீர்மானம் தேவை

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்காத அரச அதிகாரிகள் தொடர்பில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்



நாட்டில் நிலவும் வரட்சியான வானிலை காரணமாக பல பகுதிகளில் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

குருணாகல், அக்கரைப்பற்று, பண்டாரவளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் நீர் இருப்பு மிகவும் குறைவாகவே காணப்படுவதாக தெரிவித்துள்ள சபை, குறித்த பகுதிகளுக்கு ஏற்றவிதத்தில் நீர் திறந்து விடப்படும் என தெரிவித்தது.

தொடர்ச்சி P2



# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு கள விஜயம்

■ *சண்முகம் தவசீலன்*

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி குறித்து கடந்த 8ஆம் திகதியன்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கமைய தொல்பொருள் திணைக்களத்தினர், சட்டவைத்திய அதிகாரி அடங்கிய குழுவினர் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில் வியாழக்கிழமை (10) சம்பவ இடத்துக்கு கள விஜயம் செய்திருந்தனர்.

தொடர்ச்சி P2

போலி ஆவண விவகாரம்

# முற்றாக நிறுத்த நடவடிக்கை



போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இலங்கையர்களை இத்தாலிக்கு அனுப்பும் பெரும் வர்த்தகம் போலி முகவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் இதனை முற்றாக நிறுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்ததும்

# ஆசியான்அங்கத்துவத்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவில் அங்கத்துவம் பெற்று, ஏனைய ஆசியான் நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கடன் மேம்படுத்தல் நிறுத்தப்பட்டால்

# அனைத்து துறைகளும் ஒரு வாரத்தில் வீழ்ச்சியடையும்



கடன் மறுசீரமைப்புச் செயல்முறை இன்னும் முடிவடையவில்லை என்றும் இந்த செயற்பாட்டை சீர்குலைக்க பல்வேறு நபர்கள் முயற்சித்து வருகின்றனர் என்றும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த கடன் மேம்படுத்தல் திட்டம் நிறுத்தப்பட்டால், வங்கிகள் உட்பட அனைத்து துறைகளும் ஒரு வாரத்தில் வீழ்ச்சியடைந்து விடும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நிதி முகாமைத்துவத்தில்

# நல்லாட்சி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது

## சென்னையில் சேமசிங்க தெரிவிப்பு



நிதி முகாமைத்துவத்தில் நல்லாட்சி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஊழல் தடுப்புச் சட்டம், பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகம், புதிய மத்திய வங்கிச் சட்டம் போன்ற புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தி, நிதி முகாமைத்துவத்தில்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# உரிமையையே கோருகிறோம்

இந்தியாவில் இருந்து தொழில் நிமித்தம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட பெருந்தோட்ட எமது உறவுகள் நலிவுற்ற, உரிமையற்ற சமூகமாகவும்தான் வாழ்கின்றனர்.

கடந்த 200 வருட காலத்தில் பிரிட்டிஸ் ''வெள்ளையர்''களின் ஆட்சியில் இருந்து ''மாநிற'' பேரினவாத ஆட்சிக்கு பெருந்தோட்டங்கள் சென்றுள்ளதே தவிர முன்னேற்றகரமான எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.

பெருந்தோட்ட எமது உறவுகள் நவீன அடிமைத்துவத்தில் போஷாக்கின்மை, உணவு பாதுகாப்பின்மை, பாலியல் வன்கொடுமைகள், தொழில் சுரண்டல்கள், பாரபட்சம், அதிக சுமை, அதிக நேர வேலை குறைவான கூலி, காணி உரிமை மறுப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். இந்த பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து நாங்கள் அனுதாபத்தை கோரவில்லை, எமது உரிமையையே கோருகிறோம்.

இலங்கையில் வாழும் பெருந்தோட்ட மக்கள் குறித்து இந்தியா விசேட கவனம் செலுத்தியுள்ளது. பெருந்தோட்ட மக்கள் கடந்த 200 வருடகாலமாக இலங்கை பிரஜைகளாகவே வாழ்ந்து நாட்டின் பொருளாதாரத்துக்கு தங்களின் உழைப்பை இன்றும் அர்ப்பணித்து வருகிறார்கள்.

பெருந்தோட்ட மக்களுக்காக இந்தியா 300 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது. இந்த நிதியை பெருந்தோட்ட சமூகத்தின் கல்வி முன்னேற்றத்துக்காக பயன்படுத்த வேண்டுமென என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறேன்.

பெருந்தோட்ட மக்கள் இரண்டாம் தரப்பினராகவே பார்க்கப்படுகிறார்கள். ஆகவே எம்மை இலங்கை பிரஜைகளாக ஏற்றுக்கொண்டு தேசிய நீரோட்டத்தில் எமது மக்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் எவரின் அனுதாபத்தையும் கோரவில்லை. எமக்கான உரிமையை, நியாயம் ஆகியவற்றையே கோருகிறோம்.

பெருந்தோட்ட மக்களுக்காக இந்தியா ஒத்துழைப்பு வழங்குவதை போன்று பிரிட்டன் அரசாங்கமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்கு பிரிட்டன் அரசு உதவ வேண்டுமென கொழும்பில் உள்ள இலங்கைக்கான பிரிட்டனின் பதில் உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்றார்.

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

வரட்சியினால் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, புத்தளம், குருணாகல், பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய 7 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 93,171 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிலவும் கடும் வரட்சி காரணமாக வெவ்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதார பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், வெப்பத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு அடிக்கடி நீர் அருந்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# தெரிவுக்குழுவில் சு.கவுக்கு பிரதிநிதித்துவம் இல்லை

பாராளுமன்றத்தின் சபை விவகாரக் குழுவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் தொடர்பில் இருப்பவர்களுக்கு அவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எதிர்க்கட்சி அரசியல் செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. எனவே எங்களுக்கு அந்த வாய்ப்பை கொடுங்கள்" என்றார்.

இது தொடர்பில் அப்போது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவிக்கையில், "இதுபற்றி நாளை (இன்று )சபை அலுவல்கள் குழுவில் பேசுவோம்" என்றார்.

தன்போது எழுந்த அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க , "நான் வெளியிட்ட கருத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பேசினார். பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சபைக்கு வந்திருந்தார். அவர் இந்த குழுவில் உள்ளார்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஆளும் கட்சியில் அமர்ந்துள்ள அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கும் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் எதிர்க்கட்சி பிரதிநிதித்துவம் பெறவில்லை என்றால், எதிர்க்கட்சித் தலைவருடன் பேசி அந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டும்" என்றார்.

# டொலர், தங்கத்தின் பெறுமதி சரிந்தது

புதன்கிழமை (09) அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 314 ரூபாய் 94 சதமாகவும் விற்பனை விலை 327 ரூபாய் 52 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை, உள்ளூர் தங்க சந்தையில் தங்கத்தின் விலை சற்று குறைந்துள்ளதாக உள்ளூர் தங்க வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

161 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பவுண் 22 கரட் தங்கம் 159 ஆயிரம் ரூபாயாகவும் 175 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பவுண் 24 கரட் தங்கம் 173 ஆயிரம் ரூபாயாகவும் குறைவடைந்துள்ளது.

# அனைத்து துறைகளும் ஒரு வாரத்தில் வீழ்ச்சியடையும்

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் புதன்கிழமை (09) நடைபெற்ற இலங்கை தொழிற்சங்க அமைப்பின் 36 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "ஒரு நாடு என்ற வகையில், நாட்டின் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத சவாலை எதிர்கொள்ளும் வரை பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தேடவில்லை. அதனால்தான் பொருளாதாரச் சிக்கல் வளர்ந்தது.

அரசியல் தலைவர்கள் பொருளாதாரம் தொடர்பான சரியான முடிவுகளை எடுக்கத் தயங்கியதால் நிலைமை மேலும் மோசமானது. மேலும் இந்த பொருளாதார நெருக்கடியை மக்கள் கடுமையாக உணர்ந்தனர். அவர்கள் வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். சில போராட்டங்கள் வேறு கோணத்தில் இருப்பதை போராட்டத்தின் நிறைவில் காண முடிந்தது. இந்நிலையில் தலைமைத்துவ வெற்றிடம் தென்பட்டது. அன்றிருந்த அரசு சுவரில் நசுக்கப்பட்டிருந்தது.

அதனால் தான் அப்போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது.

அதன்போது எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து அரசாங்கத்தைக் கையளிக்க ஜனாதிபதி முயற்சித்தார். ஆனால் அந்த சவாலை ஏற்க எதிர்க்கட்சித் தலைவர் தயாராக இருக்கவில்லை.

உலகிலேயே முதன்முறையாக ஜனாதிபதி ஒருவர் மற்றொருவருக்கு ஆட்சி அதிகாரம் வழங்க அழைப்பு விடுத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு மறுப்பு தெரிவித்தது கூட கின்னஸ் சாதனையாகவே கருதுகிறேன்.

# சத்தியாக்கிரக போராட்டதை கைவிட்டனர் விவசாயிகள்

உடவளவ நீர்த்தேக்கத்தின் நீரேந்து பகுதிகளில் பல மாதங்களாக மழை பெய்யாததால், உடவலவ நீர்த்தேக்கத்தின் நீர் வற்றத்தொடங்கியது. உடவளவ நீர்த்தேக்கத்தை நம்பி 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கையும் பயிர் செய்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வறட்சி காரணமாக வயல்களும் மேட்டு நிலப் பயிர்களும் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதை அடுத்து, எம்பிலிப்பிட்டிய நகர விவசாயிகள் கடந்த ஜூலை 23ஆம் திகதி சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (08) முதல் நீரை திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையிலேயே இந்த சத்தியாக்கிரக போராட்டம் கைவிடப்பட்டது.

# "கிழக்கிலிருந்து மலையகம்" செயற்திட்டம் முன்னெடுப்பு

புதிய செயல்திட்டம் உருவாக்கப்பட்டு புதிய வேலைத் திட்டங்கள் விரைவில் மாகாணம் எங்கும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது .

இலங்கையின் பொருளாதார சமூக அரசியல் வளர்ச்சியில் முதுகெலும்பாக திகழ்கின்ற மலையக மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்திக்காக பல ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

"மலையகம் 200" என்பது வெறும் கொண்டாட்டமாக போய்விடக்கூடாது என்பதில் இப் புதிய செயலணி கவனம் செலுத்துகிறது.

"கிழக்கில் இருந்து மலையகம்" என்ற செயற்றிட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு ஒத்துழைப்பு வழங்க ஆர்வம் உள்ள அமைப்புகள் தனி நபர்கள் பிரமுகர்கள் அனைவருக்கும் பகிரங்க திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சசி 70 601 5350 , ரியால் 76 734 0510, ஜனா 0772363956 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று இந்த புதிய செயலணி அறிவித்திருக்கின்றது.

# முற்றாக நிறுத்த நடவடிக்கை

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (10) எம்.பிக்களான தயாசிறி ஜயசேகர ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகர எம்,பி, தமது கேள்வியின் போது, "இத்தாலி தூதுவராலயத்தில் இலங்கையர்கள் எதிர்கொள்ள நேரும் அசௌகரியங்கள் தொடர்பில் வெளி விவகார அமைச்சர் தமது அவதானத்தை செலுத்த வேண்டும்.

இலங்கையர்கள் இத்தாலிக்கு செல்லும் போது அவர்கள் தொடர்பில் எந்த பொறுப்பேற்பும் இத்தாலி தூதுவராலயத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை. அங்கு அவர்களது சேவையை பெற்றுக் கொள்வதற்காக எமது நாட்டவர்கள் மாதக்கணக்கில் அலைந்து திரிய வேண்டியுள்ளது.

# பாராளுமன்றம் கலைப்பு: 90 நாட்களில் தேர்தல்

அதன் பின்னர் புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் ஆட்சி பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து இம்ரான்கான் மீது 100-க்கும் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இம்ரான்கானின் எம்.பி. பதவி பறிபோனது. ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதைத்தொடர்ந்து இம்ரான்கான் உடனடியாக கைது செய்யப்பட்டு பஞ்சாப் மாகாணத்தின் அட்டாக் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் பாராளுமன்றம் இரவோடு இரவாகக் கலைக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரகடனத்தைப் பாகிஸ்தான் ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் 90 நாட்களுக்குள் நடத்தப்பட உள்ளது. தற்போதைய நிலையின்படி இம்ரான் கான் போட்டியிட முடியாது என்பதால் அவரது ஆதரவாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# அரச அதிகாரிகள் குறித்து கடும் தீர்மானம் தேவை

தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றிகொண்டு நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்துக்கு கடற்றொழில் அமைச்சு பாரிய பங்களிப்புகளை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்காத அரச அதிகாரிகள் தொடர்பில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமெனவும், 2048 இல் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க அனைவரும் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "2048 ஆம் ஆண்டளவில் முன்னேறிய இலங்கையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நடைமுறைப்படு-த்தப்பட்டுள்ளது.

# ஆசியான்அங்கத்துவத்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

இந்து-பசுபிக் பிராந்தியம் தொடர்பான 'ஆசியான்' அமைப்பின் தொலைநோக்கு பார்வைக்கு தான் உடன்படுவதாகவும், அந்த தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதற்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இந்தோனேசிய தூதரகத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற 56ஆவது "ஆசியான்" தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

1967 ஒகஸ்ட் 8ஆம் திகதி தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ஆசியான்) இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கையொப்பத்துடன் தாய்லாந்தின் பெங்கொக்கிலுள்ள வெளியுறவு அமைச்சுக் கட்டிடத்தில் உருவாக்கப்பட்டது. புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மியான்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய 10 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.

ஆசியான் உறுப்பு நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 8 ஆம் திகதி "ஆசியான் தினத்தை" கொண்டாடுகின்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, 'ஆசியான்' அமைப்பில் நுழைவதற்கான முன்மொழிவு நிராகரிக்கப்பட்டதாகவும், அதன் அங்கத்துவம் கிடைக்காததால், அதற்கு மாற்றீடாக, பிராந்திய பரந்த பொருளாதாரக் கூட்டிணைவில் இணைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

# மிலிந்த மொரகொடவின் பதவிக்காலம் முடிகிறது

காலத்தை முடித்துக்கொண்டு ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இலங்கை திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29ஆம் திகதி அன்று உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட அவர், தனது பதவியில் இருந்து விலகுவதற்கான தீர்மானத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை அதிகாரங்கள் கொண்ட உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட நிலையில், இலங்கையில் அமைச்சரவை அதிகாரத்துடன் நியமிக்கப்பட்ட முதலாவது உயர்ஸ்தானிகர் என்பதும் விசேட அம்சமாகும்.

உயர் ஸ்தானிகராக இருந்த காலத்தில், இலங்கை மற்றும் இந்தியாவின் மின் கட்டமைப்புகளை இணைப்பது உட்பட, இணைப்பு முயற்சிகளில் கவனம் செலுத்தி, இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ஒரு விரிவான மூலோபாயத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு கள விஜயம்

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணியை ஒகஸ்ட் 21ஆம் திகதி முன்னெடுப்பதற்கு உத்தேச தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கள விஜயத்தின் பின்னர் இது தொடர்பாக சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் மனித புதைகுழி வழக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதை போன்று சந்தேகத்துக்கிடமான பிரதேசத்தை பார்வையிடுவதற்கு அழைக்கப்பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வருகை தந்தார்கள் அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்தியர் வாசுதேவாவும் வேறு நிறுவனமும் பிரசன்னமாகியிருந்தனர்.

# நல்லாட்சி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது

தேவையான சுதந்திரம், வெளிப்படைத் தன்மை மற்றும் நல்லாட்சி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

முதலீட்டு வாய்ப்புகளை வெளிப்படுத்துவதன் மூலம் இலங்கை பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதற்காக பங்குதாரர்களுடன் இணைந்து கொழும்பு பங்குச் சந்தை சென்னையில் ஏற்பாடு செய்த "இன்வெஸ்ட் ஸ்ரீலங்கா" மன்றத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை சரியான பாதையில் சென்றுகொண்டிருப்பதாகவும், நாட்டில் முதலீடு செய்வதற்கு இதுவே சிறந்த தருணம் எனவும் தெரிவித்த அவர், கடன் நிலைத்தன்மை மற்றும் அபிவிருத்தியை அடைவதற்கு அரசாங்கம் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

முதலீட்டாளர்கள் இலங்கை சந்தையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் பொருளாதாரத்தின் அடிப்படை கட்டமைப்பு பலவீனங்களை நிவர்த்தி செய்யும் வகையில் ஆழமான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு இலங்கை பலப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

மேக்ரோ பொருளாதார ஸ்திரமின்மைக்கான முக்கிய காரணங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு தேவையான சீர்திருத்தங்கள் நிறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# “மாத்தளைக்கு ஓக். 12 வரவும்”

“மாண்புமிகு மலையக மக்கள்’ - கூட்டிணைவினால்’ ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த ஜுலை 28ஆம் திகதி தலைமன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட மலையக எழுச்சிப் பயணத்தின் நிறைவு நாள் நிகழ்வு மாத்தளையில் ஓகஸ்ட்12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் அனைவரையும் பங்குபெறுமாறு அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான அருட்திரு செங்கன் தேவதாஸன் கேட்டுக் கெண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அருட்திரு செங்கன் தேவதாசன்,

மலையகம் 200 எழுச்சிப் பயணத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் மாத்தளை சிறி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் எதிர்வரும் ஆகஸ்ட்12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பல்வேறு நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகவுள்ளது.




காலைவேளையில் இறுதி நாள் நிகழ்வு ஆரம்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து தலைமன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நடை பயணம் மாத்தளையை வந்தடைந்த பின் 12:30 மணிக்கு இறுதிநாள் நிகழ்வுகள் நிறைவடையவுள்ளது.

மலையக மக்களின் வருகையின் 200 ஆவது வருடப் பூர்த்தியை நினைவுகூரும் மலையகத் தமிழ் சமுதாயத்தினர், முழுமையான மற்றும் சமமான பிரசைகளாக, அர்த்தபூர்வமாகப் பங்கேற்பதற்காக 11அம்ச கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

தலை மன்னார் முதல் மாத்தளை வரையான நடைபயணம் இப்பிரதிபலிப்பின் பகுதியொன்றாக அமைவதற்கு மேலதிகமாக, அவர்களின் முறையீட்டிற்கு ஆதரவளிக்கும் ஓர் ஆதரவுப் பயணமாக இந்த நடைப்பயணம் அமைந்திருந்தது.

மலையக எழுச்சிப் பயணத்தின் ஆரம்பம் முதல் ஒவ்வொரு நாட்களிலும் ஒவ்வொரு பொழுதுகளிலும் எங்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்கிய, உதவிகள் நல்கிப் பங்களிப்புச் செய்த, அனைத்து வழிகளிலும் தோளோடு தோள் நின்ற அரசியல் தரப்பினர், சமூக மட்ட அமைப்புகள், சிவில் சமூகத்தினர், வர்த்தகர்கள், பொது மக்கள் என அனைவருக்கும் இந்த இடத்தில் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# புளூபீல்ட் தோட்ட பிரச்சினைக்குத் தீர்வு

இறம்பொடை, புளூபீல்ட் தோட்டத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த தொழில் பிணக்குகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் தீர்வு காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வேலைக்கு செல்வதற்கு தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இறம்பொடை, புளூபீல்ட் தோட்ட தொழிலாளர்கள் பல மாதங்களாக பணி புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். தமக்கான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன செலுத்தப்பட வேண்டும், சேவைக்கால கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பன உட்பட தொழில்சார உரிமைகளை கோரியே போராட்டத்தை முன்னெடுத்தனர்.



இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பான கலந்துரையாடலொன்று அமைச்சில் புதன்கிழமை (09) நடைபெற்றது.

இதன்போது ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை செலுத்துவதற்கு தோட்ட நிர்வாகம் உடன்பட்டுள்ளது, சேவைக்கால கொடுப்பனவும் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தொழிலாளர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் மீளப்பெறப்படும் எனவும் நிர்வாக தரப்பால் கூறப்பட்டுள்ளது. எனவே, திங்கட்கிழமை முதல் தொழிலாளர்கள் வேலைக்கு செல்வார்கள் என தோட்ட தலைவர்கள் கூறினர்.

அத்துடன், புளூபீல்ட் தோட்ட மக்கள் தொடர்பில் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தோட்ட மக்களின் பிரச்சினை, அவர்களுக்கான உரிமைகள் தொடர்பில் தொடர்ந்து அவதானம் செலுத்தும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.



## ஐயாவுடன் செந்தில் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் அவர்களை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து மரியாதை நிமித்தம் சந்தித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடல் மேற்கொண்டார்.



# கிழக்கில் அரிசி ஆலைகள் கொரியா இணக்கம்

கொரியா அரிசி உணவுப்பொருட்கள் சங்கத்தின் பிரதிநிதிக் குழுவிற்கும்,கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் சௌமியபவானில் புதன்கிழமை (09) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்தில் அரிசி ஆலைகளை அமைப்பது தொடர்பில்,கொரியா பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளதோடு, இது உணவு பாதுகாப்பு திட்டத்திற்கு உதவியாகவும் ,விவசாயிகளுக்கு சிறந்த விற்பனை விலையின் மூலமாக வருமானம் ஈட்டக் கூடியதாகவும் அமையும்.

இதன் ஊடாக மேலும் மலையகத்திற்கு, விநியோகத்தை ஆரம்பிப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

# அம்மனுக்காக களத்தில் குதித்த பெட்டிமா

■ எஸ்.சதீஸ்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டிக்கோயா, சஞ்சிமலை மேல்பிரிவு தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கதவினை உடைத்து அம்மன் கழுத்தில் இருந்த ஒன்றரை பவுன் பெறுமதிமிக்க தாலியுடன் கூடிய மாலை மற்றும் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் என்பன களவாடபட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஆலயத்தின் பூசகரிடம் சுமார் நான்கு மணி நேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக நோர்வூட் பொலிஸார் மேலும் தெரிவித்தனர் இந்த சம்பவம் புதன்கிழமை (09) மாலை இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.



ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், தடைவியல் பொலிஸாரை வரவழைத்து விசாரணைகளை ஆரம்பித்த போது ஆலயத்தின் உண்டியல் மற்றும் கத்தி ஒன்று தேயிலை மலையில் இருந்து மீட்கப்பட்டது.

ஹட்டனில் இருந்து பெட்டிமா என்ற பொலிஸ் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அந்த மோப்பநாய் உண்டியல் இருந்த தேயிலை மலையில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சென்று அமர்ந்து கொண்டது.

அதனையடுத்து சந்தேகத்தின் பேரில் ஆலயத்தின் பூசகரை கைது செய்து விசாரனைகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மதகின் கீழ் ஆணின் சடலம் மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில், பார்வீதியிலுள்ள மதகு ஒன்றின் கீழிருந்து அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவரின் சடலம் வியாழக்கிழமை (10) காலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் பார்வீதி உப்போடை சந்தியை அண்மித்த பகுதியிலுள்ள மதகின் கீழ் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார்



சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நீதிமன்ற உத்தரவை பெறுவதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலவச யூரியா வழங்கி வைப்பு

■ நிதர்ஷன் வினோத்

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக யாழ் மாவட்டத்தில் சிறிய அளவில் நெற் பயிற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான இலவச யூரியா உரம் வழங்கியவைக்கப்பட்டது.

யாழ் சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஸூகோஷி ஹிடோகி, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயம் அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி விஜேந்திர சரண், யாழ். மாவட்ட கமநல சேவைகள்



திணைக்கள பிரதி ஆணையாளர் பிரணவன் தெய்வநாயகி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதன் போது சாவகச்சேரி கமல சேவைகள் திணைக்களத்துக்குட்பட்ட 2777 சிறிய விவசாயிகளுக்கு 25 kg நிறை கொண்ட 3774 யூரியா உரப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, யாழ் மாவட்டத்திற்கு வழங்கவென 25 கிலோ கிராம் கொண்ட 19,973 யூரியா பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனி சக்கரத்தில் சாகசம்

# தட்டிக்கேட்டவர் மீது தாக்குதல்

மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த இளைஞனின் இறுதி ஊர்வலத்தின் போது மோட்டார் சைக்கிளில் ஆபத்தான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டு பயணித்த இளைஞர்களை எச்சரித்த மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர், தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் வாத்துவ வெரகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்த நபரை இளைஞர்கள் தலைக்கவசத்தால் தாக்கியதுடன், உதைத்தும் கைகளால் தாக்கியும் உள்ளனர்.

கடந்த (07) பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த வாதுவ தல்பிட்டிய பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 19 வயதுடைய துலாஞ்ச ஹேஷாமின் இறுதிக் கிரியைகள் வாத்துவ வெரகம பொது மயானத்தில் புதன்கிழமை (09) பிற்பகல் இடம்பெற்றது.

அங்கு சுமார் முப்பது பேரடங்கிய இளைஞர்கள் குழு ஒன்று மோட்டார் சைக்கிள்களுடன் ஆர்ப்பாட்டத்துடன் வந்து இறந்த உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். இறுதி ஊர்வலத்தில் ஆபத்தான முறையில் ஒற்றைச் சக்கரத்துடன் காட்சியளித்தனர். பலர் அதை வெறுப்புடன் பார்த்தார்கள், ஆனால் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் அங்கு நின்றிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்தவரை கிட்டத்தட்ட 50 இளைஞர்கள் தங்கள் கைகளால் தாக்கியும் கால்களால் உதைத்தும் உள்ளனர். அத்துடன், தலைக்கவசத்தாலும் தாக்கியுள்ளனர்.

# வேம்பிராய் மயானத்திற்கு மயான அபிவிருத்தி சபை

■ பு.கஜிந்தன்

தென்மராட்சியின் மிகப்பெரிய மயானமாகவும் அதிக மக்களின் பாவனையில் இருக்கக்கூடியதுமான சாவகச்சேரி பிரதேச சபையின் வேம்பிராய் பொது மயானத்திற்கு பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் பல தசாப்தங்களுக்கு பிற்பாடு மயான அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டுள்ளது.

மயான அபிவிருத்தி சபையின் தலைவராக ந.பாலச்சந்திரனும் செயலாளராக சி.உதயசேகரனும் பொருளாளராக கு.தனுசனும் பிரதேச மக்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மயான அபிவிருத்தி சபையால் எதிர்காலத்தில் மயானத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மயானத்தை துப்பரவு செய்தல், நிலத்தை மட்டப்படுத்துதல் உடல்களை புதைப்பதற்கு பிரத்தியேக இடங்களை ஒதுக்கி அதற்குரிய வசதிகளை ஏற்படுத்துதல், சுற்றுமதில் அமைத்தல்,

மயானத்தில் பூக்கன்றுகள் மற்றும் நிழல் தரு மரங்களை நாட்டுதல், மயானத்திற்கு பெயர்ப்பலகை நாட்டுதல், அறிவுறுத்தல் பலகைகள் இடல், மின்னிணைப்பு பெறுதல், விளக்குகள் பொருத்துதல் மற்றும் நீர் குழாய்கள் மூலம் நீர் பெறும் வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்டவை முன்னெடுக்கப்படவுள்ளன.

# இருநாள் கண்காட்சி

“தேயிலைச் சாயம்” எனும் தொனிப் பொருளிலான புகைப்படக் கண்காட்சியொன்று மாத்தளை சர்வதேச காந்தி நினைவு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (11), சனிக்கிழமை 12 ஆகிய இரண்டு தினங்கள் காலை 9 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த கண்காட்சியை மாற்றுக் கொள்கைக்கான நிலையம் ஏற்பாடு செய்துள்ளது. சுவையான தேநீர்க் கோப்பையில் மூழ்கிக் கிடக்கும் மலையக சமூகத்தின் வாழ்க்கை வரலாறு கடந்த சில வருடங்களாக “ தேயிலைச் சாயம்” எனும் பெயரில் புகைப்படக் கண்காட்சிகள் நாட்டின் பல இடங்களில் நடாத்தப்பட்டு வரும் நிலையில் மலையக சமூகம் இலங்கைக்கு வந்து 200ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இக்கண்காட்சி நடாத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# யாழில் பிறப்பு பதிவு இல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை 15

■ எஸ். தில்லைநாதன்

யாழ். மாவட்டத்தில் 15 சிறுவர்கள் பிறப்பு பதிவற்ற நிலையில் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் புதன்கிழமை (09) இடம்பெற்ற இந்த கூட்டத்தில் கடந்த காலாண்டில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 104 ஆக காணப்பட்டபோதும் பல்வேறுபட்ட முயற்சிகளுக்கு பின்னர் 89 பேருக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 15 ஆகக் காணப்படுவதாகவும் ,நீதிமன்ற வழக்குகள் மற்றும் தந்தை தாய் இடையே காணப்படும் முரண்பாடு காரணமாகவே இப் பிறப்பு தொடர்பான பதிவை மேற்கொள்வதில் சிக்கல் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் யாழ்.மாவட்டத்தில் காணப்படும் சிறுவர் இல்லங்கள் தொடர்பாக உரிய கண்காணிப்பை மேற்கொள்ளுதல் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டது.

# பாரத்தை குறைக்க வேண்டும்; பரீட்சைகளை குறைத்துவிடக்கூடாது

நாங்கள் எல்லாம் படிக்கிற காலத்தில் மூன்று தவணைகளிலும் ஒழுங்கான புள்ளிகளை எடுக்கவேண்டும். இல்லையேல் சித்தியடையவில்லை என சிவப்பு எழுத்தில் எழுதிவிட்டு, பெற்றோரை கூப்பிட்டு ஒன்றுக்கு இரண்டாக, ஆசிரியர்கள் சொல்லிவிடுவார்கள். அன்றைக்கு பிடித்த சனி, அடுத்த வருடம் ஆரம்பிக்கும் வரையிலும் விடாது என்று பலரும் கூறுவதை கேள்விப்பட்டிருப்போம்.

பாடசாலை பரீட்சை தவணைகளை பொறுத்தவரையில் இன்றுவரையிலும் மூன்று தவணைகளே இருகின்றன. அதில், முதலாவது தவணை விளையாட்டுப் போட்டி உள்ளிட்ட போட்டிகளுடன் நிறைவடையும் எனினும் கற்றல் செயற்பாடுகளும் பரீட்சையும் நடைபெறும். இரண்டாம் தவணைக்குப் பின்னர் வகுப்பேற்ற பரீட்சையாகவே மூன்றாம் தவணையை பலரும் கவனத்தில் எடுப்பர்.

எனினும், 2024 ஆம் ஆண்டுமுதல் ஒரேயொரு தவணைப்பரீட்சையை மட்டுமே நடத்த தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அண்மையில் அறிவித்திருந்தார். இதுதொடர்பில் இரு பக்க கருத்துக்கள் பொதுவெளியில் பேசப்படுகின்றன.

ஆகா, எவ்வளவு இலேசு, ஒரேயொரு பரீட்சையை முடித்துக்கொண்டு, அடுத்த வகுப்புக்கு போகவேண்டியதுதான் என, 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாடசாலை பரீட்சைகளில் தோற்றியோர் மனக் கஷ்டத்துடன் கூறுகின்றனர். எனினும், தங்களுடைய பிள்ளைகளின் பலம், பலவீனத்தை அறிந்துக்கொள்வதற்கு பரீட்சைகள் கட்டாயமென பெற்றோர்கள் பலரும் கருத்துரைத்துள்ளனர்.

முதலாம் தவணையில் குறைந்த புள்ளிகளை பெற்ற மாணவர்கள், அடுத்தடுத்த தவணைகளில் கூடுதலான புள்ளிகளை பெறுவர். ஒவ்வொரு பாடம் அல்லது தொகுதி முடிவிலும் மதிப்பீடு நடத்தப்பட்டு அந்தப் புள்ளிகளும் இறுதிப்பரீட்சை புள்ளிகளுடன் இணைக்கப்படுவது, சாத்தியமாகாது என்றும் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களின் பலம், பலவீனத்தை பரிசோதிக்கும் மிகச் சிறந்த கருவி பரீட்சையாகும். அதற்கென முன்னோடி பரீட்சைகள் நடத்தப்படும். மூன்று மணிநேரத்துக்கு ஒரே இடத்தில் அமர்ந்திருந்து அமைதியாய் பரீட்சை எழுத, தங்களை தயார்படுத்த வேண்டும். இறுதி பரீட்சை மட்டுமே நடத்தப்படுமாயின், சிலவேளைகளில் மாணவர்கள் அதற்கு பரீட்சியமானவர்களாக இருக்கமாட்டார்கள்.

தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பும் பெற்றோர்களிடத்தில் கடுமையான போட்டி நிலவுகின்றது. அதற்காக பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். பிரத்தியேக வகுப்பு, வீடுகளில் கூடுதலான நேரத்தை ஒதுக்கி, கற்றுக்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல் இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை பொதுவாக அம்மா மார்களுக்கான பரீட்சை என்றே பலரும் கூறுவர். தங்களுடைய பிள்ளைகளுக்கு அப்பால், அம்மாக்களே, மேலதிக வகுப்புகளுக்கு முன்பாக குவிந்து கிடப்பார்கள். தங்களுடைய பிள்ளை சித்தியடைய வேண்டுமென அயராது பாடுபடுவர். அங்கு கற்பிப்பதை விடவும் முன்னோடி பரீட்சைகளுக்கே கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்படும்.

இதற்கிடையே, பாடப்புத்தகங்களின் அதிகூடிய பாரத்தால் மாணவர்கள் பலரும் சிரமப்படுகின்றனர். அதன் நிறையை குறைக்கும் வகையிலான அறிவிப்பு மிகச் சிறந்தது. ஆனால், பரீட்சைகளை குறைத்தால், மாணவர்களின் பலன், பலவீனத்தை சுரண்டி பார்க்க முடியாது என்பதே உண்மை.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

பெரும்பசியை விட மனம் களைத்துப் போவதே கடினமானனது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரமும் எடுக்கின்றது.

எல்லோரது நெஞ்சமும் அடிக்கடி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறுவதுண்டு. சிலவேளை நகைப்பார்கள்; சிலசமயம் வேலைப்பழுவால் எரிச்சல்படுவார்கள். குழந்தைகளை ஆர்வத்துடன் அணைக்கும்போது சந்தோச சாகரத்தில் மூழ்கிவிடுவார்கள். உணர்ச்சிக்கு மனிதன் அடிமையாகின்றான்.

ஆர்வத்துடன் பணிசெய்பவர்கள், திடீர்ரெனக் கிடைக்கும் அதிர்ச்சித் தகவல்களால், தங்கள் நிலை மறந்துவிடுகின்றனர். அவை சந்தோசமானவையாகவும் இருக்கலாம். துன்பமான செய்தி கேட்ட மனம், பலம் இழந்துவிடுகின்றது.

கட்டுப்படுத்தும் நிலையை, பொறுமையுடன் உருவாக்குக!

இந்நிலையில் இருந்து விடுபடுவது எப்படி? எங்களால் எல்லாச் சந்தர்ப்பத்திலும் தன்னிலை மறக்காமல் இருந்து, தங்களைச் சுவீகரிக்க மனஒடுக்கம் முக்கியமானது.

தியானம், சிந்தனைகளைத் தெளிவூட்டும். எதையும் அதிர்வுடன் நோக்காமல், சாந்தமான நிலையில் நோக்குவதற்கு கொண்டுவந்துவிடும். தனிமை தேவையானது. அமைதியை ஊட்டுகின்றது.

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கொக்காவிலுக்கு பேருந்து சேவையை நடாத்துங்கள்

முல்லைத்தீவு கொக்காவில் வரை பேருந்து சேவைகளை நடாத்துமாறு இப்பகுதி மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது திருமுறிகண்டிக்கும் பரந்தனுக்கும் இடையில் பேருந்து சேவைகள் நடைபெறுகின்றன.

ஆனால், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் கொக்காவில் பகுதியில் 60 வரையான குடும்பங்கள் தற்போது புதிதாக குடியமர்ந்துள்ளன. கொக்காவில் பகுதியில் ஏ-9 வழியாக பயணிக்கின்ற பேருந்துகள் பொது மக்களை ஏற்றுவதில்லை.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செ.பிறேமகாந் தற்போது திருமுறிகண்டிக்கும் பரந்தனுக்கும் இடையில் நடைபெறுகின்ற குறுந்தூர பேருந்து சேவைகளை கொக்காவில் வரை நீடிப்பதன் மூலம் 60 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நன்மையடையும். இதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேணடும் எனவும் தெரிவித்திருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பேருந்துகள் குறிப்பாக ஏ-9 சாலையில் மக்களையும் மாணவர்களையும் ஏற்றிச் செல்வதில்லை என்ற குறைபாடுகள் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

நடராசா கிருஸ்ணகுமார்

## கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 13:

# டொனமூர் ஆணைக்குழுவும் யாழ் வாலிபர் காங்கிரசும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையில் ஜனநாயக மறுப்பின் தொடக்கங்களை இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களிலேயே தரிசிக்க முடியும். 1927ம் ஆண்டு அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வதற்காக இலங்கை வந்த டொனமூர் ஆணைக்குழு சர்வசன வாக்குரிமையை முன்மொழிந்தது.

1931க்கு முன்னர் நடைமுறையில் இருந்த சட்டவாக்க சபைத் தேர்தல் முறையிற் படித்த, சொத்து அல்லது உயர் வருமானமுள்ள ஆண்கட்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. இதை விரிவுபடுத்தி அனைவருக்கும் வாக்குரிமை வழங்க டொனமூர் ஆணைக்குழு விரும்பியது. ஏற்கெனவே சட்டவாக்கற் சபையில் உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டோர் தங்கள் பதவி அதிகாரங்களைத் தொடர்ந்து பேணவும் வலுப்படுத்தவும் உதவுகிற விதமாகவே இதற்கான தங்களின் எதிர்ப்பை வெளியிட்டனர். பெரும்பாலானோர் வாக்குரிமையை ‘அனைவருக்கானதான’ ஆக்குவதை எதிர்த்தனர். வாக்களிக்கத் தகுதியுடையோரின் எண்ணிக்கையை பல்வேறு கட்டுப்பாடுகளுடன் அதிகரிப்பதை விரும்பினர்.

1921இல் அருணாசலத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாதிகளின் வசமாகி விட்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ், வாக்குரிமை விரிவுபடுத்தப் படுவது பற்றி அக்கறை காட்டவில்லை. குறிப்பாக மேட்டுக்குடி சிங்களப் பேரினவாதிகள் குறித்த விடயத்தில் மிகவும் பிற்போக்கானவர்களாகவும் ஜனநாயக மறுப்பாளர்களாகவும் இருந்தனர். இவர்களது இந்நடத்தை தொடர்பான தனது விசனத்தை இந்த ஆணைக்குழுவின் நான்கு உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி ட்றமண்ட்-சீல்ஸ் வெளிப்படையாகவே முன்வைத்திருந்தார். முழுமையான சர்வசன வாக்குரிமைக்குக்கு இலங்கைத் தொழிலாளர் சங்கம் மட்டுமே ஆதரவு தெரிவித்தது. பிற்காலத்தில் மலையகத் தமிழருக்கு எதிரான விஷமப் பிரச்சாரத்தை முன்னெடுத்த ஏ.ஈ. குணசிங்ஹ இச்சங்கத்திற்குத் தலைவராக இருந்தபோதும் மலையகத் தமிழருக்கு வாக்குரிமையை அவர் எதிர்க்கவில்லை. அதேவேளை இலங்கைத் தேசிய காங்கிரஸ் மலையகத் தமிழருக்கு வாக்குரிமை வழங்கப்படுவதை கடுமையாக எதிர்த்தது.

டொனமூர் ஆணைக்குழுவுக்கு தங்கள் முன்மொழிவுகளை முன்வைத்த தமிழ்த் தலைமைகள் - குறிப்பாக பொன்னம்பலம் இராமநாதன் - படிக்காதோருக்கான வாக்குரிமையை எதிர்த்தனர். இதற்கான காரணங்கள் விளங்கக் கடினமானவையல்ல. தமிழ் மக்களின் அரசியல், உத்தியோகங்கள் என்பன யாழ் குடாநாட்டைச் சேர்ந்த வேளாளர் என்று தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட சாதியினரின் கைகளிலேயே இருந்தது. அத்துடன் பயிர்ச் செய்கைக்கான நிலம் உட்பட்ட அசையாச் சொத்துக்கள் பெருமளவும் அச் சாதியினர் வசமே இருந்தது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியின் அரசியலில் ஆதிக்கஞ் செலுத்தியவர்கள் இச் சமூகப் பிரிவின் சொத்துடைமையாளர்களும் பட்டம் பதவிகளாலும் உயர் மட்டத்திலிருந்தவர்களுமே.

ஆங்கிலம் படித்த வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களே கொலனிய நிருவாகத்திலும் அரசியலிலும் பங்கு பற்றுகிற சூழ்நிலையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தம்மை அடையாளப் படுத்திக் கொண்டவர்கள், குடா நாட்டுச் சைவ வேளாள மேட்டுக்குடிகளாகவே இருந்தனர். எனவே தமிழ்த் தலைவர்கள் என்போர் ஒரு வசதி படைத்த பிரிவினராக மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட சாதி அடையாளத்தையும் பிரதேச அடையாளத்தையும் கணிசமான அளவுக்கு ஒரு மத அடையாளத்தையுங் கொண்டிருந்தனர். இந்தச் சிறுபான்மையின் நலன்களிலேயே அன்றைய தமிழ்த் தலைவர்கள் எனப் பட்டோரது அக்கறைகள் குவிந்திருந்தன.

படிக்காதவர்களுக்கு வாக்குரிமை வழங்கினால் அது சிங்களப் பேரினவாதிகளின் கைகளை வலுப்படுத்தும் என்பதாலேயே இராமநாதன் படிக்காதவர்களுக்கான வாக்குரிமையை எதிர்த்தார் என்று ஏ.ஜே. வில்சன் தனது நூலில் இதற்கான உப்புச்சப்பற்ற நியாயத்தை வழங்கியிருப்பார்.

டொனமூர் ஆணைக்குழு தனது அறிக்கையில் ஒரு விடயத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஆட்சியதிகாரத்தில் இலங்கையர்களின் பங்களிப்பை விரும்புகிற இலங்கையின் அரசியல்வாதிகள் அதை மக்களிடம் பரவலாக்க விரும்பவில்லை. ஆட்சியில் மேலதிக அதிகாரங்களைக் கோருவோர் சர்வன வாக்குரிமைக்கு எதிராகவே இருந்தனர். சிங்களத் தலைவர்களிடையே கண்டியச் சிங்களவர் - கரையோரச் சிங்களவர் என்ற வேறுபாடு மிக முக்கியமானதாக இருந்தது. இதனால் இலங்கைவாழ் ‘இந்தியர்கட்கு’ நிபந்தனை இன்றி வாக்குரிமை வழங்கியமை கண்டிய மலைநாட்டுச் சிங்களத் தலைவர்களிடையே, கசப்புணர்வை ஏற்படுத்தியது.

டொனமூரின் பரிந்துரைகளில் சிறுபான்மையினருக்கு போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்பதைக் காரணங்காட்டி இராமநாதன் தலைமையிலான தமிழத்தலைவர்களும் டி.பி.ஜாயா தலைமையிலான முஸ்லீம் தலைவர்களும் எதிர்த்தனர். ஆனால் வெகுசீக்கிரத்தில் அவர்கள் புதிய பிரதிநித்துவ முறையில் பங்கேற்கத் தயாராகினர். பங்கேற்காமல் விடுவதால் தமது அரசியல் அதிகாரத்தை இழந்துவிடுவோம் என அவர்கள் அஞ்சினர். இத்தலைவர்களுக்கு சிறுபான்மையினரின் உரிமைகளை விட அரசியல் அதிகாரமே முக்கியமானதாக இருந்தது. இந்நிலை இன்றுவரைத் தொடர்கிறது.

இந்தப் பின்புலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இளைஞர் அமைப்பொன்று முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எதிர்த்தது. அவர்கள், இலங்கைக்கு முழுமையான சுயாட்சியை டொனமூர் ஆணைக்குழு மறுப்பதால் இதன் பரிந்துரைகளை எதிர்த்தனர். யாழ்ப்பாண மாணவர் கழகமாகத் தொடங்கி யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸாக உருப்பெற்ற அமைப்பு 1920களிலேயே யாழ்க்குடாநாட்டில் முற்போக்கான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. குறிப்பாக சாதி ஒழிப்பு, சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பு, தேசிய ஆடை, ஆங்கிலத்தின் இடத்தில் தாய் மொழி போன்றவற்றை முன்னிறுத்தி வலிய மக்கள் இயக்கத்தை அமைத்து பணி செய்திருந்தது.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் டொனமூர் பரிந்துரைகளுக்கான தமது எதிர்ப்பை மக்கள் மயமாக்கியது. தங்களது செய்தியை மக்களிடம் எடுத்துச் சென்றது. வடபுலத்து மக்கள், 1931ம் ஆண்டுத் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்று கோரியது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் இக்கோரிக்கைக்கு எதிரான வன்மமான பிரச்சாரத்தை தமிழ்த் தலைவர்கள் முன்னெடுத்தார்கள். பதவிகளின் மீதான தமிழ் அரசியல் தலைவர்களின் மோகம் இந்தப் பிரச்சாரத்துக்கான அடிப்படைக் காரணமாகும். அவர்களுக்கு மக்கள் பற்றியோ கொலனியாதிக்கதிலிருந்தான விடுதலை பற்றியோ எதுவிதமான அக்கறையும் இருக்கவில்லை. அவர்கள் கிராம சபைகளுடாகப் புறக்கணிப்பை எதிர்த்துத் தீர்மானங்களை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொண்டார்கள். அம் முயற்சிகள் தோல்வி கண்டன. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் புறக்கணிப்புக் கோரிக்கை வெற்றியளித்தது. 1931ம் ஆண்டு தேர்தலை வடபுலத்து மக்கள் முழுமையாகப் புறக்கணித்து வலிமையான செய்தியொன்றைச் சொன்னார்கள். இலங்கையின் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் ஒற்றுமையாகச் சொன்ன வலிமையான செய்திகளில் இது முதன்மையானதும் முன்னோடியானதுமாகும்.

ஆனால் துரதிஷ்ட வசமாக இந்தப் புறக்கணிப்பு நடவடிக்கைக்கு தென்னிலங்கையில் பரந்த ஆதரவு இருக்கவில்லை. நாடாளவிய ஒரு சுதந்திர இயக்கத்திற்கான முதலாவதும் கடைசியுமான வாய்ப்பு நழுவிப்போனது. தென்னிலங்கையின் சந்தர்ப்பவாத அரசியல் இதற்குத் தடையானது. மேட்டுக்குடி சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ்த் தலைவர்கள் போலவே பதவிகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதுவே இலங்கையின் கேடுகெட்ட அரசியல் வரலாற்றின் மோசமான வரலாற்றின் தொடக்கப் பக்கங்களை அலங்கரித்தது. வடபுலத்தில் தேர்தலில் போட்டியிட முடியாத நிலையில் மன்னாரிலும் மலையகத்திலும் கொழும்பிலும் தமிழ்த் தலைவர்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

தமிழ் மக்களின் ஒற்றுமையைப் புறக்கணித்து தமிழ்த் தலைமைகள் மேட்டுக்குடி நலன்களுக்காக இலங்கையின் பிற பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்டு மக்களுக்குத் துரோகமிழைத்தனர். இதன் வரலாறு மிக நீண்டது.

# தன்வினை தன்னைச் சுடும்



சிவசுந்தரம் கஜானா
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

பானுவும் சுகுமாரும் நண்பர்கள். சுகுமாருக்கு வேலை கிடையாது. கையில் ஒரு ரூபாய் கூடா இல்லை. பானுவுக்கோ நல்ல சம்பளம். இப்போது மாத முடிவாதலால் இவனிடத்திலும் அதிகம் பணமில்லை. நண்பர்கள் இருவரும் பூங்கா ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். சுகுமாரு திடீரென்று ஒருகல்லை உதைத்தான். பானுவுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. 'அதை ஏன் உதைக்கிறாய்?' என்று கேட்டான் பானு.

'எனக்கு அலுத்துப் போய்விட்டது. பணம் ஏன் சிலரிடம் மட்டும் சேர வேண்டும்? பெரும்பான்மையானோர் வறுமையில் உழல்கின்றார்கள், இந்த நிலைமையை சரிப்படுத்த முடியுமா, பானு?' என்று தீவிரமாகப் பேசினான், சுகுமாரன். பிறகு சற்று நேரம் கழித்து, 'நீ இரகசியமாக வைத்திருப்பேன் என்று மட்டும் சொல்லு. நான் ஒரு இரகசியத்தைச் சொல்லுகிறேன்' என்றான். தொழிலாளி, முதலாளி பிரச்சினையைத் தீர்ப்பதில் பானுவுக்கும் அதிக அக்கறை உண்டு.

'நான் எந்த இரகசியத்தையும் வெளியிடுவதில்லை என்று உனக்குத் தெரியுமே' என்று பானு சொன்னான். சுகுமாரன் தனது பேசிலிருந்து ஏதோவொன்றை வெளியில் எடுத்தான். பானு அம்மாதிரி ஒருகாலும் பார்த்ததில்லை. 'நாம் பணக்காரர் ஆவதற்குரிய வழி இதில் இருக்கிறது' என்றான் சுகுமாரன். 'இது ஜெயக்காந்தனின் செக் புத்தகம். அவர் இன்று என்னை வேலையினின்று நீக்கிவிட்டார். நான் இதை எடுத்துக்கொண்டு வந்து விட்டேன்.' பானுவுக்கு கலவரமும் ஏமாற்றமும் ஏற்பட்டது. 'இந்தப் புத்தகத்தால் நமக்கு என்ன பயன்?' என்று கேட்டான்.

'அதுவா? சொல்லுகிறேன், கேள். நீ சித்திரங்கள் நன்றாய் வரைவாய் அல்லவா?' என்று கூறியவாறே, இன்னொரு கடுதாசியை அவனது பேசிலிருந்து எடுத்தான். 'இங்கே பார், இந்தக் கையொப்பத்தைப் போல் உன்னால் எழுத முடியுமா?'

பானு அதைப் பார்த்தான். ஜெயக்காந்தன் சுகுமாரனுக்குக் கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் அது. அதனடியில் அவரது கையொப்பம் இருந்தது. அதனைப் பார்த்த பானு, 'கொஞ்சம் சிரமப்பட்டால் இதுபோல் எழுதி விடலாம். ஆனால் அது நமக்கு உபயோகமாவது எப்படி?' என்றான்.

'இதைப் பார்த்து, இதே மாதிரி எழுதப் பழகு, மகனே. மற்றவைகளை அப்பா சொல்லித் தருவார்' என்றான் சுகுமாரன். அச்சமயம் அங்கு விளையாடிக் கொண்டிருந்த மற்றப் பொடியன்கள் வந்து சேர்ந்தனர். சிறிது நேரம் பல விடயங்களைப் பேசிச் சிரித்து விட்டு, யாவரும் அவ்விடம் விட்டு அகன்றனர். மாலை மயங்கும் வேளையாகி விட்டது. சுகுமாரனும் பானுவை நோக்கி, 'நாளை இந்நேரம் மறுபடியும் இங்கு சந்திப்போம்' என்று கூறிச் சென்றான்.

மறுநாள் பானு எழுதிய கையொப்பத்தைச் சுகுமாரனிடம் காட்டினான். அது நன்றாயிருந்தது. எவ்வித வித்தியாசமும் கண்டு கொள்ள முடியாது. சுகுமாரன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் பானுவை நோக்கி, 'நாம் மிகுந்த பணக்காரர்களாகி விட்டோம், பானு! இதோ பார், இந்த இடத்தில் அதே மாதிரிக் கையொப்பமிடு. நாளைய தினம் வாங்கிற்குப் போய் ரூ.50,000 வாங்கிக் கொள்வோம். நீயும் உன் வேலையை விட்டு விடலாம்' என்றான்.

பானு சுகுமாரனை விட வயதிற் குறைந்தவன். அவ்வளவு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனுமல்ல. ஆனால் பள்ளிக்கூடத்தில் நேர்மையைப் பற்றிக் கற்றிருந்தான். அதனால் அவன் சற்றுத் தயங்கினான். 'நான் வரவில்லை; இஷ்டமானால், நீ மட்டும் போயிட்டு வர நம்மைப் பிடித்துக் கொள்வார்கள்' என்றான்.

'ஏன் இவ்வளவு பயப்படுகிறாய்? நம்மை ஒருவரும் பிடிக்க மாட்டார்கள். நான் சொல்வதைக் கேள். பணத்தை எடுத்துக் கொண்டு, நாம் கண்டிக்குப் போகலாம்; அங்கு உனக்கு வேண்டியதையெல்லாம் வாங்கிக் கொள்ளலாம்; இஷ்டம் போல் பொழுது போக்கலாம்' என்றான் சுகுமாரன்.

பானுவின் மனதிலே ஒரு பெரிய போராட்டம் நடந்தது. கடைசியில் பண ஆசைதான் வெற்றி பெற்றது. நண்பன் யோசனைக்கு இணங்கினான். அடுத்தநாள் செக்கைப் பணமாக்கிக் கொண்டு, மத்தியான ரெயிலில் கண்டிக்குப் போகத் தீர்மானித்தார்கள்.

அன்றிரவு பானுவுக்குத் தூக்கம் வரவேயில்லை. காலையில் எழுந்ததும், வேலைக்குப் போகலாமா வேண்டாமா என்று சிறிது நேரம் மனப்போராட்டம் நடந்தது. பெற்றோர்களோ தங்கள் காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள். ஆகவே அன்று இரவு சுகுமாரோடு தங்கப் போகிறான் என்று சொன்ன போது அவர்கள் தடை சொல்லவில்லை.

> **நமக்குத் தேவையான தைத்தானே எடுக்கின்றோம்? ஜெயக்காந்தனிடம் மட்டும் ஏன் இவ்வளவு பணம்? இது பொதுவுடைமைக் காலம், நான் மட்டும் ஒரு அரசியல் வாதியாக இருந்தால், இந்த ஏற்றத் தாழ்வுகளை எல்லாம் ஒரே அடியாக ஒழித்து விடுவேன்'**

அடுத்த நாள் பாங்கில் உட்கார்ந்திருந்த போது, பானுவின் கை, கால்கள் நடுங்கின. ஆனால் அந்தத் தூங்கு மூஞ்சிக் கசியர் செக்கை வாங்கிக் கொண்டு, சுகுமாரனிடம் பணத்தைக் கொடுப்பதைப் பார்த்ததும், அவன் முகத்திலே பிரகாசம் ஏற்பட்டது.

என்ன குஷி! ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்ளலாம் என்ற நினைவோடு, இருவரும் அடுத்தநாள் கண்டிக்கு ரெயில் ஏறினார்கள். அங்கு பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழகம், பறவைகள் பூங்கா, அம்புலுவெள என்று எல்லா இடமும் சுற்றினார்கள். இரவு ஹோட்டலில் தங்கினார்கள். மறுநாள் வீட்டிற்குத் திரும்பியாக வேண்டுமே. ரெயிலில் ஏறினார்கள். ஆனால் வரும்போது இருந்த சந்தோசம் அப்போது இல்லை. பணக்காரன் வாழ்வு எப்போதும் ஆனந்தமாக இருக்குமென்று எண்ணுவது தவறு என்பதை உணர ஆரம்பித்தார்கள். பானுவுக்கு இலேசாக வயிறு வலித்தது. தான் இது வரை சாப்பிட்டிராத பல புதிய சாப்பாடுகளைச் சாப்பிட்டதால் அஜீரணம். சுகுமாரனும் அவ்வளவு உற்சாகமாக இல்லை. பணம் அத்தனையும் செலவாகி விட்டது. வாங்கிய பொருள்களால் தற்சமயம் பயன் இல்லை. கொஞ்சக் காலமாவது அவைகளை மறைத்து வைக்க வேண்டும். பிழைப்புக்கு இனி என்ன செய்வதென்று சுகுமாரன் யோசித்துக் கொண்டே இருந்தான். பெரிய பெரிய திட்டங்களில் அவன் மனது சென்றது.

'பானு, குஷியாய் இரு, அப்பர். அடுத்த தடவை வேலை இதை விடப் பிரமாதமாக இருக்க வேண்டும். இரண்டு பேரும் நுவரேலியாக்குப் போக வேண்டும், என்ன?'

> **குரலிலே ஒரு தளர்ச்சி இருந்தது. சுகுமாரனின் திட்டங்களில் அவனுக்குப் பூரண சம்மதம் இல்லை**

'எப்படி முடியும்?' பானுவின் குரலிலே ஒரு தளர்ச்சி இருந்தது. சுகுமாரனின் திட்டங்களில் அவனுக்குப் பூரண சம்மதம் இல்லை.

'அடுத்த தடவை பாங்கிலிருந்து குறைந்தது ஐந்து இலட்சம் ரூபாயாவது எடுக்க வேண்டும். நீ உன் வீட்டில் சொல், உனக்கு நுவரேலியாவில் வேலை இருக்கிறதென்று. ஒருவருக்கும் தெரியாமல் நாம் நுவரேலியாவிற்குக் கிளம்பலாம்.'

'சீ, சீ! இனிமேல் உங்கள் முதலாளி பணத்தைத் தொடக் கூடாது. கண்டிப்பாக அகப்பட்டுக் கொள்வோம்' என்றான் பானு.

'ஊ ஹு ம்! என்னப்பா வந்துவிடப் போகிறது? நமக்குத் தேவையான பணத்தைத் தானே எடுத்துக் கொள்கின்றோம்? ஜெயக்காந்தனிடம் மட்டும் ஏன் இவ்வளவு பணம் இருக்க வேண்டும்? இது பொதுவுடைமைக் காலம், அப்பா? நான் மட்டும் ஒரு அரசியல் வாதியாக இருந்தால், சமுதாயத்தில் இருக்கும் இந்த ஏற்றத் தாழ்வுகளை எல்லாம் ஒரே அடியாக ஒழித்து விடுவேன்'

பானு என்னென்னவோ சொல்லி, வாதபடிப் பார்த்தான். திரும்பவும் அவனுக்குத் தோல்விதான். சுகுமாரனின் ஆவேசச் சொற்கள் அவன் மனதை மாற்றி விட்டன.

இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள். அயலார் பார்த்த பார்வையும், அவர்கள் கேட்ட கேள்விகளும் இவர்களை மிகவும் பரபரப்படையச் செய்தன. வீட்டில் அதிகம் தலை காட்டக் கூடாதென்று எண்ணினார்கள். திரும்பவும் பாங்கிற்குப் போனார்கள். தற்செயலாக எதிரே ஜெயக்காந்தன் வந்தார். அவர் செக் புத்தகத்தைத் திருடியது அவருக்குத் தெரிந்திருக்குமோ என்று ஒரு கணம் யோசித்தார்கள். ஆனால் அவர் அப்படித் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. தன் மோட்டார் சைக்கிளில் ஏறிப் போய் விட்டார்.

அவர்கள் ரூபா. 500,000 செக் எழுதிக் கொண்டு வந்திருந்தார்கள். இந்தத் தடவை கசியர் தூங்கவில்லை. அவர் முகத்தில் ஒரு கடுமை இருந்தது. அவர் செக்கைப் பார்த்து விட்டு, எழுந்திருந்து பக்கத்தில் உள்ள ஒர் அறைக்குச் சென்றார். சுகுமாரன் வேறு பக்கம் பார்ப்பது போல் நடித்தான். என்ன இது! கதவு திறக்கிறது. கசியர் வருகிறார் அவர் மட்டுமா? அல்ல. வேறு மூன்று பேரும் வருகின்றார்கள். ஒருவர் பாங் மனேஜர். மற்றையவர் பொலிஸ் அதிகாரி, 'உங்கள் கையை நீட்டுங்கள்' என்று கூறினார். அவர்கள் கையை நீட்ட விரைவில் கையில் விலங்கு மாட்டப்பட்டது. போலிஸ் ஸ்ரேசனுக்குக் கொண்டுபோய் அறைக்குள் அடைத்தனர். அவர்கள் மனதில் பல எண்ணங்கள் அலை மோதின. சிறுவயதில் தான் பள்ளியில் படித்த நீதி மொழிகள் எல்லாம் பானுவுக்கு நினைவு வந்தன.

'வினை விதைப்பவன் வினை அறுப்பான்' 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' போன்றவை அவன் மனக்கண் முன் தோன்றின. முகத்தில் கையைப் புதைத்துக் கொண்டு அழுதான். தீய சகவாசத்தால் கெட்ட பெயரைத் தேடிக் கொண்டதோடு, வேலையையும் இழந்து, ஜெயிலுக்கு வந்த விட்டோமென வருந்தினான். திருட்டுப்பழம் முதலில் இனித்தாலும் பின்னால் நிச்சயமாக கசப்பை உண்டாக்குமென நன்கு உணர்ந்தான்.

ஜப்பான் நன்கொடையில்

# 8,360 மெட்ரிக் டொன் உரம் விநியோகம்



எதிர்வரும் பெரும்போக நெற்பயிர்ச் செய்கைக் காலத்தில் பகிர்ந்தளிப்பதற்காக 8,360 மெட்ரிக் டொன் யூரியா உரம், உணவு மற்றும் விவசாய அமைப்பினால் (FAO) விவசாய அமைச்சுக்கு இவ்வாரம் வழங்கி வைக்கப்பட்டது. ஜப்பான் அரசாங்கத்தின் தாராள நன்கொடையினூடாக இது சாத்தியமாகியது. இந்த உரத் தொகை, இலங்கையின் உலர் மற்றும் இடைவெப்ப வலயங்களில் காணப்படும் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 228,000 குறுநில விவசாயிகளுக்கு மத்தியில், உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும், நாட்டிலுள்ள குறுநில விவசாயிகளின் நெகிழ்வுறுதியை அதிகரிப்பதற்காகவும்; பகிர்ந்தளிக்கப்படும்.

குருநாகல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒரு ஹெக்டெயர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் குறுநில விவசாயிகளை இலக்குவைத்து நன்கொடை வழங்கப்பட்டது.

இந்த உடனடி உதவித் திட்டத்தின் கீழ், 0.5 ஹெக்டெயர் வரையிலான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இலவசமாக 25 கிலோகிராம் யூரியா உரம் வழங்கப்படும் என்பதுடன், 1 ஹெக்டெயர் வரையிலான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோ கிராம் யூரியா உரம் இலவசமாக வழங்கப்படும்.

இலங்கையின் கமத்தொழில் அமைச்சரான மஹிந்த அமரவீர அவர்கள் நாட்டின் விவசாயத்துறை இலக்குகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் இத்தகைய ஆதரவளிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, இந்த யூரியா உரங்கள் கிடைக்கப்பெறுவது இலங்கையின் நிலையான மீட்சிக்கு வழிவகுக்கும். எமது விவசாயிகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதனூடாக, ஒரு வளமான மற்றும் நெகிழ்வுறுதி மிக்க விவசாயத்துறையின் வளர்ச்சியை நாம் ஊக்குவிக்கிறோம். இலங்கையின் குறுநில விவசாயிகளுக்கு வழங்கப்படக்கூடிய இந்தப் பெறுமதி மிக்க உதவிக்கு நான் ஜப்பானிய அரசாங்கத்திற்கும், ஜப்பானிய மக்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்- எனக் குறிப்பிட்டார்.

> **ஹெக்டெயர் வரையிலான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோ கிராம் யூரியா உரம் இலவசமாக வழங்கப்படும்**

ஜப்பானியத் தூதுவரான அதிமேதகு மிஸுகோஷி ஹிதெயாகி அவர்கள் இலங்கையின் விவசாயத்துறைக்கு ஆதரவளிப்பதற்கான ஜப்பானின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியதுடன், -இலங்கை அரசாங்கம் மற்றும் FAOவின் கூட்டிணைந்த முயற்சியின் ஒரு அங்கமாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். நிலைபேறான நடைமுறைகளினூடாக குறுநில விவசாயிகளுக்கு வலுவூட்டும் எமது பகிரப்பட்ட குறிக்கோள் இந்த முன்னெடுப்புடன்; நன்றாகப் பொருந்திப் போகின்றன. இவ்வுதவி இலங்கையின் விவசாய சமூகங்களின் முன்னேற்றத்திற்குக் கணிசமான பங்களிப்பை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்- எனவும் கருத்துரைத்தார்.

இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான FAO வின் பிரதிநிதியான விம்லேந்திர ஷரண், நிலைபேறான விவசாயத்தை நோக்கிய நிறுவனத்தின் அர்ப்பணிப்பைக் கோடிட்டுக் காட்டிய அதே வேளை, இலங்கை விவசாயச் சமூகங்களுக்கு உதவி செய்வதன் அர்ப்பணிப்பையும் குறித்துக்காட்டி, -நிலைபேறான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்குமான அதன் குறிக்கோளில் FAO உறுதியாக உள்ளது. குறுநில விவசாயிகள் முகங்கொடுக்கும் சவால்களை நிவர்த்திப்பதற்கு நாடுகள் ஒன்றிணையும்போது நேர்மறையான விளைவுகளைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பதை ஜப்பானிய அரசாங்கம் மற்றும் கமத்தொழில் அமைச்சு ஆகியவற்றின் கூட்டிணைவு எடுத்துக்காட்டுகிறது- எனவும் குறிப்பிட்டார்.

FAO, அதன் பங்காளர்களுடன் இணைந்து, இலங்கையில் விவசாயத்துறையை ஆதரிப்பதற்கான அர்ப்பணிப்பையும், நாட்டில் உணவுப் பாதுகாப்பை முன்னோக்கிக் கொண்டு செல்வதிலும் நெகிழ்வுறுதியுடன் கூடிய விவசாய- உணவுக் கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதிலும் ஒற்றுமையுடன் செயற்படுவதையும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

# சிறுவர்களுக்கு இலவச coding நிகழ்ச்சித்திட்டங்கள்



SLT-MOBITEL மற்றும் STEMUP மையம் ஆகியன இணைந்து, SLT-MOBITEL இன் வெலிசறை, மொரட்டுவ மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களினூடாக இலவச coding நிகழ்ச்சித் திட்டங்களை சிறுவர்களுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளன. கொழும்பு, மட்டக்களப்பு, கிரிமட்டியான, ஹங்குரான்கெத்த மற்றும் தொலுவ ஆகிய பகுதிகளிலுள்ள பொது நூலகங்களிலும் இந்த இலவச coding நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மேலும், இலங்கை தேசிய நூலகத்துடன் இணைந்து, 2023 டிசம்பர் மாதமளவில், நாடு முழுவதிலும் காணப்படும் மொத்தம் 15 பொது நூலகங்களுக்கு இந்த இலவச coding நிகழ்ச்சித் திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கு SLT-MOBITEL திட்டமிட்டுள்ளது.

இந்த இலவச coding நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் நடவடிக்கையானது, டிஜிட்டல் யுகத்தில், ஆழமாக சிந்திக்கும் திறனை மேம்படுத்தல், எதிர்காலத்துக்கு பொருத்தமான திறன்களை கட்டியெழுப்பல், நாட்டின் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு பங்களிப்பு வழங்கல் போன்ற SLT-MOBITEL இன் நம்பிக்கைகளுக்கமைய சிறுவர்களுக்கு ஆதரவளிப்பதாக அமைந்துள்ளது.

STEMUP மையம் என்பது இலாப நோக்கற்ற நிறுவனமாக திகழ்வதுடன், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) கல்வியில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்குவதாக அமைந்துள்ளது.

இந்த நீடிப்பின் பிரதான நோக்கம், மாணவர்களுக்கு STEM கல்வியை நூலகங்களில் இலவசமாக பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது. குறிப்பாக, தன்னார்வ செயற்பாட்டாளர்கள் தமது நேரத்தையும், அறிவையும் ஒதுக்கீடு செய்து இந்த நிகழ்ச்சிகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்குபவர்களாக இணைந்து, சிறுவர்களுக்கு உதவ முன்வந்துள்ளனர்.

'CoderDojo@SLT' Coding என்பது STEM கல்வியை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருப்பதுடன், ஆழமான சிந்திக்கும் திறன்கள், ஆக்கத்திறன், ஒன்றிணைந்த செயற்பாடு மற்றும் தொடர்பாடல் போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது. இந்த திறன்கள் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக, மாணவர்களுக்கு தமது ஆய்வு பிரச்சினைகள் தொடர்பில் தேடல்களை மேற்கொள்ளவும், மாறுபட்ட நிலைகளிலிருந்து தீர்வுகளை இனங்காணவும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

வருடம் முழுவதும் மாதாந்தம் இந்த நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், சிறுவர்களுக்கு தமது coding திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புகளை வழங்கும். நிறுவனத்தின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் சிறந்த வாய்ப்பாக இந்த நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

8 முதல் 17 வரையான எந்தவொரு பிள்ளையையும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக பதிவு செய்து கொள்ளுமாறு SLT-MOBITEL அழைப்புவிடுத்துள்ளது.

அமெரிக்கா

# நிலவுக்கு அழைத்து செல்லவிருக்கும் ஓரியன்

அரை நூற்றாண்டு கடந்த பின்னர் நிலவுக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை அமெரிக்காவின் நாசா ஆராய்ச்சி கழகம் கையில் எடுத்துள்ளது. இந்த கனவு திட்டத்திற்கு உறுதுணையாக எலான் மஸ்கின் ஸ்பெக்ஸ் எக்ஸ் நிறுவனம், இந்தியாவின் இஸ்ரோ ஆராய்ச்சி மையம் உள்பட உலகின் முன்னணி நிறுவனங்கள் உதவுகிறது.

இதற்கான திட்டத்தை ஆர்திமிஸ் என பெயரிட்டு கடந்த 2017-ம் ஆண்டு முதல் விண்கலன்களை தயாரித்து வருகின்றன. இந்தநிலையில் ஆர்திமிஸ் 2 திட்டத்தை முன்னெடுத்து அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிலவுக்கு மனிதனை அனுப்ப நாசா தயாராகி வருகிறது.




அதற்காக ஒரு பெண் விண்வெளி வீராங்கனை உள்பட 4 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்நிலையில் தங்களை நிலவுக்கு அழைத்து செல்லும் ஓரியன் விண்கலத்தை முதல்முறையாக விண்வெளி வீரர்கள் நேரில் சென்று பார்த்தனர்.

புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் வைத்து ஓரியன் விண்கலத்தை ஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்து வருகிறார்கள். தங்களை உற்சாகப்படுத்தி கொள்ளவும் ஆயத்தப்பணிகளை முடுக்கி விடும் பணிக்காக விண்வெளி வீரர்கள் நிலவுக்கு அழைத்து செல்லவிருக்கும் விண்கலத்தை நேரில் பார்க்க அனுமதி வழங்கப்பட்டதாக நாசா அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் இந்த விண்கலத்தின் உறுதித்தன்மையை பரிசோதிக்கும் வகையில் பல்வேறு சோதனைகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் உட்படுத்தி வருகிறார்கள்.

போர்த்துகல்

## சாதனையை முறியடித்த பாபி

பொதுவாகவே நாய்களின் ஆயுட்காலம் 10 முதல் 15 வயது வரை தான். ஆனால் போர்த்துகல் நாட்டை சேர்ந்த பாபி என்ற பெயரிடப்பட்ட நாய் 30 வருடங்கள் வாழ்ந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்பு அவுஸ்திரேலியாவை சேர்ந்த நாய் 29 ஆண்டுகள் மற்றும் 150 நாட்கள் வாழ்ந்தது தான் உலகின் மிக அதிக வயது கொண்ட நாய் என்ற சாதனையை படைத்திருந்தது. அந்த சாதனையை பாபி முறியடித்துள்ளது.






வடகொரியா

## “போருக்குத் தயாராகுங்கள்”

வடகொரியாவிடம் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள தென்கொரியா அமெரிக்காவுடன் நெருக்கம் காட்டி வருகிறது. இது வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் -னிற்கு பிடிக்கவில்லை. இதனால் தென்கொரியாவை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், வடகொரியா ஆயுதங்கள் விநியோகம் செய்வதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. அமெரிக்காவின் அணுஆயுத நீர்மூழ்கி கப்பல் தென்கொரிய கடற்பகுதியில் காணப்பட்டது. இதற்கு வடகொரிய ஆட்சேபனை தெரிவித்தது. அமெரிக்காவுடன் இணைந்து இராணுவ பயிற்சியில் ஈடுபட இருப்பதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், போருக்கு தயாராகும் வேலைகளை வடகொரிய அதிபர் செய்துவருகின்றார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்தியப் பிரதேசம்

## கர்ப்பையில் இருந்த 15 கிலோ கிராம் கட்டி

மத்தியப் பிரதேசம் மாநிலம் அஷ்டா என்கிற நகரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கடும் வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்துள்ளார். இதையடுத்து அந்த பெண் இந்தூரில் உள்ள இண்டெக்ஸ் என்கிற மருத்துவமனையை அணுகி மருத்துவர்களிடம் வயிற்று வலி குறித்து கூறியுள்ளார்.

வயிறு மிகவும் வீக்கத்துடன் இருந்ததால் மருத்துவர்கள் பெண்ணுக்கு ஸ்கேன் உள்ளிட்ட பரிசோதனைகளை செய்து பின்னர், கர்ப்பை பையில் கட்டி இருப்பதை கண்டுபிடித்தனர். மேலும், கட்டி வெடிக்கும் நிலையில் இருந்ததால் உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.



இதையடுத்து, பெண் மற்றும் அவரது வீட்டாரின் சம்மதத்துடன், சுமார் 12 மருத்துவர்கள் மற்றும் உதவிப் பணியாளர்கள் அடங்கிய குழு இரண்டு மணி நேர அறுவை சிகிச்சையை மேற்கொண்டது. பின்னர், அறுவை சிகிச்சை வெற்றிக்கரமாக முடிந்த நிலையில் மருத்துவர்கள் பெண்ணின் வயிற்றில் இருந்து 15 கிலோ கிராம் எடை கொண்ட கட்டியை அகற்றினர்.

பீகார்

## சிறுநீர் பைக்கு பதிலாக பிளாஸ்டிக் போத்தல்

பீகாரின் ஜமுய் மாவட்டத்தில் சதார் மருத்துவமனை அமைந்துள்ளது. கடந்த திங்கட்கிழமை இரவு ஒரு நோயாளி சுயநினைவற்ற நிலையில் இங்கு கொண்டு வரப்பட்டார். அப்போது பரிசோதனை முடிந்து நோயாளிக்கு சிறுநீர் பையை பொருத்தும்படி ஊழியர்களுக்கு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந் நிலையில் உபகரணங்கள் மற்றும் மருந்துகள் பற்றாக்குறையால் அந்த ஊழியர்கள் சிறுநீர் பைக்கு பதிலாக நோயாளிக்கு பிளாஸ்டிக் போத்தல் இணைத்துள்ளனர். உபகரணங்கள் பற்றாக்குறையால் மருத்துவமனையில் சிறுநீர் பைக்கு பதிலாக பிளாஸ்டிக் போத்தல் பொருத்தப்பட்டது பீகாரில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




சத்தீஸ்கர்

## மின் கோபுரத்தில் ஏறி காதல் ஜோடி சண்டை

சத்தீஸ்கர் மாநிலம் கோரேலா- பென்ட்ரா-மார்வாகி பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவர், அதே பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவரை கடந்த 1 வருடமாக காதலித்து வந்துள்ளார். கடந்த சில நாட்களாக இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவத்தன்று அந்த இளம்பெண் காதலனுடன் ஏற்பட்ட தகராறில் மனம் உடைந்து அப்பகுதியில் உள்ள 150 அடி உயர மின் கோபுரத்தில் ஏறி உள்ளார். இதைப்பார்த்த அவரது காதலனும் மின் கோபுரத்தில் காதலியின் பின்னாலேயே ஏறி உள்ளார். தனது காதலி எந்த விபரீத முடிவும் எடுத்துவிடக் கூடாது என்பதற்காக அவரிடம் பேச்சு கொடுத்துள்ளார். ஆனால் அது மேலும் பிரச்சனையை ஏற்படுத்தி உள்ளது. அங்கு வைத்தும் இருவரும் சண்டை போட்டுள்ளனர். இதுபற்றிய தகவல் பொலிஸாருக்கு கிடைத்ததும் அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றுள்ளனர். பொலிஸார் அந்த ஜோடியை கீழே இறங்குமாறு அறிவுறுத்தியதை தொடர்ந்து அரை மணிநேரத்துக்கு பிறகு இருவரும் மின் கோபுரத்தில் இருந்து கீழே இறங்கியுள்ளனர்.



துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# ஐந்தாமிடத்துக்கு முன்னேறிய கில்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்துக்கு இந்தியாவின் ஷுப்மன் கில் முன்னேறியுள்ளார்.

ஏழாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை கில் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. றஸி வான் டர் டுஸன், 3. பக்கர் ஸமன், 4. இமாம்-உல்-ஹக், 5. ஷுப்மன் கில், 6. ஹரி டெக்டர், டேவிட் வோர்னர், 8. குயின்டன் டி கொக், 9. விராட் கோலி, 10. ஸ்டீவ் ஸ்மித். இதேவேளை பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 14ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை இந்தியாவின் குல்தீப் யாதவ் அடைந்துள்ளார்.




முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜொஷ் ஹேசில்வூட், 2. மிற்செல் ஸ்டார்க், 3. ரஷீட் கான், 4. மொஹமட் சிராஜ், 5. மற் ஹென்றி, 6. முஜீப் உர் ரஹ்மான், 7. ட்ரெண்ட் போல்ட், 8. அடம் ஸாம்பா, 9. ஷகீன் ஷா அஃப்ரிடி, 10. குல்தீப் யாதவ்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. சிகண்டர் ராசா, 4. ரஷீட் கான், 5. அஸாட் வலா

வட மாகாண பளுதூக்கல்:

## பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை பிரகாசிப்பு

■ பு. கஜிந்தன்

வட மாகாண ரீதியிலான பளுதூக்கல் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு மூன்று தங்கப் பதக்கங்கள், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், மூன்று வெண்கலப் பதக்கங்கள் என்பன கிடைத்துள்ளன.

அந்தவகையில் 17 வயதுக்குட்பட்ட பளு தூக்கல் 45 கிலோ கிராம் பிரிவில் 60 கிலோ கிராமைத் தூக்கி வி. ஜஸ்மின் மூன்றாமிடத்தையும், 55 கிலோ கிராம் பிரிவில் 63 கிலோ கிராமைத் தூக்கி நி. நிறுக்சிகா மூன்றாமிடத்தையும், 64 கிலோ கிராம் பிரிவில் 87 கிலோ கிராமைத் தூக்கி ரா. லிசனா முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



அதுபோல 20 வயதுக்குட்பட்ட பளுததூக்கல் 49 கிலோ கிராம் பிரிவில் 42 கிலோ கிராமமைத் தூக்கி சு. டிலக்சி மூன்றாமிடத்தையும், 55 கிலோ கிராம் பிரிவில் 76 கிலோ கிராமைத் தூக்கி-இ. றம்மியா இரண்டாமிடத்தையும், 71 கிலோ கிராம் பிரிவில் 96 கிலோ கிராமைத் தூக்கி வி. ஜெஸ்மினா முதலாமிடத்தையும், 76 kg பிரிவில் 66 கிலோ கிராமைத் தூக்கி-அ. சுஜாத்தா இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

## அல் ஜயா கனிஷ்ட வி.க சம்பியன்

■ எப். முபாரக்

தம்பலகாமம் முள்ளிப்பொத்தானை (95) Each Sports Club நடாத்திய 20 வயடகுட்பட்ட கால்பந்தாட்ட த் தொடரி அல் ஜாயா-கனிஷ்ட விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

திருகோணமலை, குச்சவெளி, கிண்ணியா மற்றும் தம்பலகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 20 அணிகள் பங்கேற்ற இத்தொடரில் சம்பியனான அல் ஜாயா 50,000 ரூபாய் பணப்பரிசையும் வென்றது





நிந்தவூர் கோட்ட விளையாட்டுப் போட்டியில்

## அல் அதான் வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை

■ அஸ்ஹர் இப்றாஹீம்

நிந்தவூர் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கி டையிலான சிறுவர் விளையாட்டுப் போட்டியானது அல் அறபா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது அல் அதான் வித்தியாலயமானது தரம் 3 ஆண்கள் பிரிவில், தரம் 5ஆண்கள் பிரிவில், தரம் 4 பெண்கள் பிரிவில், தரம் 5 பெண்கள் பிரிவில் முதலாமிடங்களையும், தரம் 4 ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்றுச் சாதனை புரிந்துள்ளது.

## நடுவர் பரீட்சையில் சித்தி

■ வி.ரி. சகாதேவராஜா

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாடு சபை நடத்திய நடுவர்கள் பரீட்சையில் காரைதீவைச் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர் லோகராஜு சுலக்சன் சித்தி பெற்று நடுவராக தெரிவானார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 11 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.